புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# செடல் புதினத்தில் பெண் பாத்திரப்படைப்பு

ஏ. சித்ரா
தமிழ்த்துறை, மொழிகள் புலம்,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை – 600 117.

முனைவர் தே. தேன்மொழி
உதவிப்பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை – 117.

==========================================================================

ஆய்வுச்சுருக்கம்

குடும்ப வளர்ச்சி, சமூக நலன், பொருளியல் வளம் போன்றவற்றில் பெண்களின் தனிச்சிறப்புகள் வளர்ந்துக் கொண்டே போகிறது. பண்டைய கால முதல் அரசியல், பொருளியல், கலையியல் பண்பாட்டியல் போன்ற பல்வேறு வாழ்வியல் கூறுகளோடு ஆக்கமும் ஊக்கமும், உழைப்பும் சுறுசுறுப்பும், திறமையும், குடும்பம், அஞ்சாமை, கலைத்திறன்களோடும், தியாகம் விருந்தோம்பும் பண்பும் கொண்டவர்கள் பெண்கள் அவ்வாறே ஆசிரியர் இமையம் கீழ்த்தட்டுவர்க்க பெண்களைப் பற்றி இவரது எழுத்துக்களில் எழுதி வருகிறார். அப்பெண்களின் அவலங்களை எடுதுக்காட்டும் கால கண்ணாடியாக இவரது படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கிறது. செடல் புதினத்தின் ஆசிரியர் இமையம் ஆவார். இப்புதினத்தில் காணப்படும் பெண் பாத்திரங்களை பற்றி ஆராயப்படுகிறது.

## முன்னுரை

பெண்மையைப் போற்றினால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று வாழ்ந்து காட்டியவர்கள் நம் முன்னோர்கள். பெண்கள் நம் நாட்டின் கண்களாகப் போற்றப்பட்டார்கள். நம்முடைய கலாச்சார மரபில் பெண்மையைப் போற்றுவது சிறப்பாக கருதப்படுகிறது. ‘மங்கையராயப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்மா’ என்ற கவிமணியின் வரிகள் போற்றுதற்குரியன. அத்தகைய பெண்களின் பாத்திரப்படைப்பை இமையம் அவர்கள் எழுதிய செடல் புதினத்தில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## புதின வரலாற்றில் இமையம்

புதின வரலாற்றில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றவர் ஆசிரியர் இமையம். கடலூர் மாவட்டத்திலுள்ள திட்டக்குடி வட்டத்திலுள்ள கழுதூர் என்ற கிராமத்தில் 10.03.1964ஆம் ஆண்டு பிறந்தார். இமையத்தின் பெற்றோர் வெங்கட்டன் சின்னம்மாள். இமையத்திற்கு பெற்றோரால் இடப்பட்ட பெயர் அண்ணாமலை என்பதாகும். ஆனால் தன்னுடைய இலக்கியப் படைப்புகளுக்கு இமையம் என்ற பெயரினை பயன்படுத்திவருகின்றார். இமையம் இதுவரை நான்கு சிறுகதைத் தொகுப்புகளும் ஏழு புதினங்களும் எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். குறிப்பாக “செல்லாத பணம்” புதினத்திற்கு சாகித்ய அகடாமி விருது கிடைக்கப்பெற்றுள்ளது. கனடா இலக்கியத் ‘தோட்ட இயல் விருதும்’, குவெம்பு தேசிய விருது பெற்றுள்ளார். இமையத்தின் கதைகள் எல்லாமே சமூகம் பற்றிய கதைகள் ஆகும். நடைமுறை சமூக வாழ்வின் நிஜ வாழ்வின் கந்தக நெருப்பு தான் இமையத்தை கருத்தை எழுதத் தூண்டியது. நாம் வாழ்கிற சமகால சமூகத்தை விருப்பு வெருப்பு இன்றி பெண்ணிய கருத்தை தம் படைப்புகளில் படைத்திருக்கிறார்.

செடல் பெயர்க்காரணம்

செடல் கோபால் பூவரும்பு தம்பதிக்கு எட்டாவது பெண்ணாக பிறக்கிறாள். செடல் பூவரும்பின் வயிற்றில் இருக்கும் போது திருவிழாவிற்குச் செல்கின்றாள். அங்கு கோயிலுக்கு முன் சிறுபிள்ளைகள் விளையாடுவதற்கு போட்டிருந்து குடைராட்டினம் போன்ற விளையாட்டுகளில் விளையாடிக் கொண்டிருந்தவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் போதே வலி உண்டாகி, அந்த இடத்திலேயே பிள்ளை பிறந்ததால் ஊரார்களே "செடல்" என்று அப்போதே பெயரும் வைத்து விடுகிறார்கள். இதன் காரணமாக ஆசிரியர் இமையம் இப்புதினத்திற்கு "செடல்" என்ற பெயரை சூட்டியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

பாத்திரப் படைப்பு பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்

பாத்திரப்படைப்பு பற்றி வெர்ஜினியா உல்ப் கூறும் கருத்து

> "அனைத்து நாவல் கருமே பாத்திரங்களோடு தொடர்பு உடையவை. நாவல் என்ற வடிவம் தோன்றியதே, பாத்திரங்களை உணர்த்தவும், கோட்பாடுகளைப் போதிக்கவோ, பாடல்களைப் பாடவோ ஆங்கிலப் பேரரசின் பெருமைகளைக் கொண்டாடவோ நாவல் என்ற வடிவம் தோன்றவில்லை" (*Virgina Woolf, Mr. Bennatt and Mrs. Brow quoted by Miriam Altin in Novelists on the Novel, p. 290*)

என்று குறிப்பிடுகிறார்.

மேலும், மேனாட்டுத் திறனாய்வாளரான மரைன் எல்வுட், மிரியம் ஆல்டின் கருத்துக்கள், "கதைப் பின்னலை விட இன்றியமையாத ஒன்று புனைகதையில் உண்டு அது தான் கதைப் பின்னலுக்குப் பொருளையும், சிறப்பையும், உயிரோட்டத்தையும் கொடுக்கிறது அது ஒன்று தான் பாத்திரம்"

எனவும்,

> "பாத்திரங்களை நம் மனதில் நிலை நிறுத்துவதில் அவற்றைப் படைக்க, புதினம் ஆசிரியரின் பாத்திரப்படைப்பாக்க உத்தி பெறும் இடம் மிக இன்றியமையாதது"

எனக்கூறும் கருத்துக்கள் அரணாக விளங்குகிறது.

"நாவலில் பாத்திரங்கள் உயிர் நாடியாய் அமைகின்றன." (க. கைலாசபதி, தமிழ் நாவல் வரலாறு, தில்லைத் தமிழ் சங்கம் வெள்ளி விழா மலர், ப. 39) என்று க. கைலாசபதி, தமிழ் நாவல் வரலாறு என்றும் நூலில் கூறுகிறார்.

செடல் புதினத்தில் பெண் பாத்திரங்கள்

செடல் புதினத்தில் பெண் கதாபாத்திரமாக இடம் பெறுபவள் செடல் ஆவாள். துணைமைப் பாத்திரங்களாக பூவரும்பு, பூங்கோதை, செல்லம்மாள், மண்ணாங்கட்டி, வனமயில் சின்னம்மாள் கிழவி, மீனாட்சி, அஞ்சலை, விருத்தாம்பாள், பாஞ்சாலி, உதிரி பாத்திரங்களாக அமராவதி, மூக்காயி, உண்ணாமலை, லட்சுமி, நல்லம்மாள், கருப்பாயி, குழம்புச்சட்டி, தொம்பக் கிழவி, அருந்தாள் மஞ்சாயி, ஆராயி, சிந்தாமணி போன்ற பெண் பாத்திரங்கள் செடல் புதினத்தில் இடம் பெற்றுள்ளனர்.

முதன்மைப் பாத்திரங்கள்

புதினத்தைப் படித்து முடிக்கும் வாசகனுக்குப் பாத்திரங்களில் சில மனதை விட்டு நீங்காது அடிக்கடி வந்து போவதையும், அதன் செயல்பாடுகள், குணநலன்கள் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். அவ்வகையான பாத்திரத்தை முதன்மைப் பாத்திரம் என்றே கூறலாம். இம்முதன்மைப் பாத்திரத்தை தலைமை மாந்தர் என்றும் அழைப்பர். இதனை,

> "தலைமை மாந்தர் என்பவர் குறிப்பிட்ட நாவலில் பெருஞ்செயல்களைச் செய்பவராகவும், அச்செயல்களால் பெரும் விளைவுகளை உண்டாக்குபவராகவும் இருப்பர்" (கல்கி – அகிலன் படைப்புக் கலை, ப. 81)

என்று த.வே. வீராசமி குறிப்பிடுகிறார்.

செடல

*செடல் புதினத்தின் கதைத் தலைவியாக இடம் பெறுகிறாள். கோபால், பூவரும்பு ஆகிய தம்பதியர்க்கு எட்டாவது பெண் குழந்தையாக பிறந்தவள் செடல். செடல் சிறு வயதாக இருக்கும் போதே, கோயிலின் ஐதீக முறையால் பொட்டுக்கட்டி விடப்படுகிறாள். சிறுவயதில் தந்தை, தாய் அக்காள் என வளர்ந்தவளுக்கு திடீரென்று பொட்டுக்கட்டி விட்டு தனியொரு குடிசையில் கொண்டு சென்றது அவளுக்கு அச்சத்தை தருகிறது. செடல் வளர்ந்து அவளின் அழகைக் கண்டு மற்றவர்கள் விரும்பவும். பொறாமைப்படவும் செய்யும் விதத்தில் படைக்கப்பட்டதோடு நீண்ட கூந்தலோடும், வெளுத்த மேனியையும் உடையவள் என்ற தோற்றத்தை அடைகிறாள்.*

*செடலின் பாத்திரம் சிறு வயதில் குழந்தைகளுக்கு உண்டான பல இயல்புகளில் இருந்து அவள் மாற்றப்பட்டிருக்கிறாள். அதாவது மற்ற குழந்தைகள் போல விளையாட இயலாமை, கல்வி கற்பதற்கு மறுப்பு, ஊராரால் சாமிபுள்ள, சாமிபுள்ள என்று கூறுதல், பெரியவள் போல் உடல் நலம் சரியில்லாதவர்களுக்கு மந்தரித்தல் போன்ற செயல்பாடுகளால் அவளின் குழந்தை தன்மை மறைக்கப்பட்ட நிலையை காணமுடிகிறது. ஊரில் மழையில்லை வறுமை கோரதாண்டவம் ஆடுகிறது. இதனை போக்க அம்மனுக்கு யாராவது ஒரு சிறுமியை பொட்டுக்கட்டிவிட்டால் ஊரில் மழை பெய்யும் என்ற நம்பிக்கை அதனால் செடல் என்னும் சிறுமியை அம்மனுக்கு பொட்டுக் கட்டிவிடுகிறார்கள். அன்று முதல் கோயிலில் இருந்து அம்மனுக்கு பூசை செய்து ஊரில் பிள்ளைகளுக்கு நோய் வந்தால் மந்திரித்துவிடுவது ஊருக்காக தன்னை தியாகம் செய்துகொள்ளும் பெண்ணாக வாழ்கிறாள் செடல்.*

> *“தலைவலி, காய்ச்சல், தேள்கடி என்று எது வந்தாலும் முதலில் ராமலிங்க அய்யரிடம் தான் ஓடுவார்கள். நோய்க்குத் தகுந்தவாறு அவர் மந்திரித்துப் பாடம் போடுவார். பச்சிலையோ, பச்சிலைச் சாறோ தந்து குடிக்கச் சொல்வரார். சொறி, சிரங்கு, புண், வெட்டுக்காயம் என்றால் பச்சிலையைப் பிழிந்து ஊற்றினால் மறுநாளே புண் பட்டை விட்டு போகும். கடைசியாக திருநீறை நெற்றியில் பூசி அனுப்புவார்.*
>
> *செடலுக்குப் பொட்டுக்கட்டி விட்ட பிறகு, அய்யர் ஊரில் இல்லை என்றால், செடலிடம் திருநீறு வாங்கிப் பூசிக் கொண்டுபோக ஆரம்பித்துவிட்டார்கள். அவர்தான் எல்லாமும் கற்றுத்தந்தார் என்றாலும், அவரைவிட இவளுக்குத்தான் கைராசி இருப்பதாக ஊருக்குள் பேசிக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர்” (இமையம், செடல், ப. 52)*

*ஊருக்காக தன்னை அற்பணித்துக்கொண்ட செடலின் தியாகம் போற்றத்தக்கதாகும்.*

### *துணைமைப் பாத்திரங்கள்*

*முதன்மைப் பாத்திரங்களின் செயல்பாடுகளுக்குப் பெரும் துணையாக இருப்பவை துணைமைப் பாத்திரங்கள். முதன்மைப் பாத்திரங்களின் குறிக்கோள் நிறைவேறுவதற்கு உறுதுணையாக இருப்பதோடு கதையின் போக்கில் ஏற்படும் சிறுசிறு மாற்றத்திற்கும் துணை மைப் பாத்திரங்கள் காரணமாக அமைகின்றன. துணைமைப் பாத்திரங்களின் இயல்புகள்,*

> *“முதன்மைப் பாத்திரத்தின் செயலுக்குத் துணை போகும் தன்மையுடையவை என்றும் முதன்மைப் பாத்திரம் பற்றி விளக்கம் தருபவர்கள், முதன்மை பாத்திரங்களின் கருத்துக்களுக்கு வலுவூட்டும் போக்குடையவை இவர்கள் புதினத்தின் கருவிற்கும் கருத்து விளக்கத்திற்கும் துணை நிற்பவை” (பா. சம்பத்குமார், மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் ஒரு திறனாய்வு, ப. 166)*

*என ப. சம்பத்குமார் தனது நூலான மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் ஒரு திறனாய்வில் குறிப்பிடுகிறார்.*

### *சின்னம்மாள் கிழவி*

*பொட்டு கட்டி விடப்பட்ட செடலுக்கு பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டவள் சின்னம்மாள் கிழவி கிழவிக்கென்று யாரும் இல்லை. அவள் அண்டை வீடு, எதிர் வீடு சென்று படுத்துக்கொண்டும் அவர்கள் ஏவும் வேலையைச் செய்து கொண்டும் இருக்கிறாள் கிழவி. இந்நிலையில் செடலுக்கு பொட்டுக் கட்டியவுடன் செடலுக்கு பாதுகாப்பாக இருக்கும் படி பஞ்சயத்தார் கூற அதனை ஏற்று ஊரார் கட்டிவைத்த வீட்டில் செடலுடன் தங்குகிறாள். செடலை*

*வைத்துக்கொண்டு தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்கிறாள் கிழவி என்றாலும் செடலுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக சின்னம்மாள் கிழவி விளங்குகிறாள்.*

*செல்லம்மாள், மண்ணாங்கட்டி*

*பூவரும்பின் சிறிய அன்னைகளாக இடம்பெறும் கதாபாத்திரம் செல்லம்மாள் மற்றும் மண்ணாங்கட்டி. இருவருமே செடலுக்கு பொட்டிகட்டி விட வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஏனென்றால் செடல் பிறந்த நேரம் தான் அவர்கள் குடும்பத்திற்கு அழிவை தந்தது என்று எண்ணுகிறார்கள். குடும்பத்தில் அடிக்கடி சண்டைகள் நடப்பதற்கும் காரணமாக இருக்கிறார்கள் இருவருமே. செடல் செல்லம்மாள், மண்ணாங்கட்டியிடம் அன்பாகவே காணப்படுகிறாள்.*

*மீனாட்சி*

*செடலுக்கு மீனாட்சி இல்லையென்றால் ஒன்றுமே ஓடாது. மீனாட்சிக்கும் அப்படித்தான் காலையிலேயே மீனாட்சி வந்து நான் முன்னே போறன், பின்னால் கிழவிக்கு தெரியாம வந்துடு என்று சொல்லி விட்டுப்போனாள். எப்போது போனாலும் மீனாட்சியுடன் சேர்ந்து கொண்டு இவளும் வேலை செய்வாள். இவள் இருந்தால் மீனாட்சிக்கு எப்படிப்பட்ட வேலையாக இருந்தாலும் கால் தூசு மாதிரியாக காணப்படும். மீனாட்சியும் செடலும் நெருங்கிய நட்புடன் திகழ்ந்தார்கள்.*

*வனமயில்*

*வனமயில் வாழ்வில் ஏழ்மையே நிலைத்திருக்கிறது. செடலின் சகோதரியானவள். வனமயில். கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாக ஒரு குழந்தையுடன் தன் தங்கையிடம் தஞ்சம் அடைகிறாள். செடல் சகோதரி மீது கொண்ட அன்பினால் சொந்த ஊருக்கு வருகிறாள். அவளைப் பார்க்கும் போதெல்லாம் தான் தொலைத்த வாழ்வு கிடைத்துவிட்டதாக நினைத்து மகிழ்ச்சி கொண்டாள். அம்மகிழ்ச்சி அதிக நாள் நீடிக்கவில்லை. வனமயில் நோயின் காரணமாக இரத்த வாந்தி எடுத்து இறந்துவிடுகிறாள். செடலுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய பாத்திரமாக வனமயில் அமைகிறாள்.*

*உதிரிப் பாத்திரங்கள்*

*உதிரிப் பாத்திரங்கள் பிற பாத்திர மாந்தர்கள் எனவும், சிறு பாத்திரங்கள், கதையுடன் தொடர்பில்லா பாத்திர மாந்தர்கள் என்று கூறப்படுகிறது. இவர்கள்,*

> *"ஒரேத் தன்மையுடைய உயர்ந்தவர்கள் மட்டுமே ஒரு புதினத்தில் படைக்கப்பட்டால், அந்த புதினம் சுவையொன்றும் இல்லாத கட்டுரைத் தொகுதியாக மாறிவிடும். எனவே பல்வேறு குணநலன்கள் கொண்ட மனிதர்களை புதினத்தில் பாத்திர மாந்தர்களாகப் படைக்க வேண்டும்" (இரா. தண்டாயுதம், ஓர் இலக்கிய ஆய்வு தற்காலம், ப. 83)*

*என தண்டாயுதம் இரா. ஓர் இலக்கியம் ஆய்வு, தற்காலத்தில் குறிப்பிடுகிறார்.*

*பூவரும்பு*

*செடலின் தாய், தாயின் தன்மைக்கு ஒத்து, பிறர் மனம் கோணாமலும், பிறருடைய உள்ளம் சலிக்காமலும் கோபப்படாதவளாகவும் காணப்படுகிறாள். செடலை கிழவியுடன் தான் தங்க வேண்டும் கோவிலுக்குப் போகமாட்டேன் என்று கூறும் போது பூவரும்பு*

> *"அழுகை தான் வந்தது. அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்" (இமையம், செடல், ப. 22)*

*என்ற பதிவின் வழி பூவரும்புக்கு செடல் மேல் வைத்துள் பாசம் வெளிப்படுவதை இயலாமை அறிய முடிகிறது. பொட்டுக்கட்டி விடப்பட்ட தன் கடைசி மகள் அழுதுகொண்டே தன்னிடம் வருவதை கண்டு அவளுக்கு எந்த ஆறுதலும் சொல்லமுடியாத நிலையின் தன்னுடைய இயலாமையால் அழுகிறாள்.*

முடிவுரை

செடல் புதின இலக்கியத்தில் வருகின்ற செடல் என்கிற பாத்திரப்படைப்பு தனக்காக வாழாமல் பிறருக்காக வாழும் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொட்டுக்கட்டி விடப்பட்ட செடல், மனிதனுக்கு செய்யும் தொண்டு இறைவனுக்கு செய்யும் தொண்டாக கருதி நடந்துக்கொண்டாலும் அதனால் படும் வேதனைகள், இன்னல்கள், அவமானங்கள், இழி சொற்கள், கேலி கிண்டலுக்கு ஆளாவது போன்றவை, செடலின் தியாக உணர்வை வெளிக்காட்டுகிறது. 'செடல் பொட்டுக்கட்டிவிடப்பட்ட பெண் மட்டுமல்ல, ஆட்டக்காரி மட்டுமல்ல, நல்ல மனிதத்தன்மைக் கொண்டவாளகவும் தெய்வம் என்ற நம்பிக்கைக்கு உரியவளாக கடைசிவரை இருக்கிறாள்' என்று ஆசிரியர் இமையம் செடல் பற்றி கூறியுள்ளார்.

பார்வை நூல்கள்


1. Virgina Woolf — Mr. Bennatt and Mrs. Brow (1924) Novelist on the novles, Macmillan Press Ltd., London, 4th Ed. 1973.
2. Mirian Altin — Novelists on the Novel London Duckworth and Co.,(4th Edn. 1973)
3. Maren Elwood, — Characters Make your story, Oxford University Press, London, 1955.
4. கைலாசபதி, க., — தமிழ் நாவல் இலக்கிய, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1977. முதற்பதிப்பு, 1968.
5. சம்பத்குமார், ப. — நாவல் இலக்கியம் ராஜ் காந்தி பதிப்பகம், கோயம்புத்தூர்.
6. தண்டாயுதம். இரா. — சமூக நாவல்கள் 1977 தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
7. இமையம் — செடல் கிரியா பதிப்பகம், திருவான்மையூர், சென்னை – 600 041. ஏப்ரல் 2006.


********* ********* ********** ********* ********* ********** ********** **********